## தினசரி வாழை மார்க்கெட்டில் சுங்கம் குறைப்புக்கு எதிர்ப்பு

பதிவு செய்த நாள் : மே 18,2012,03:57 IST

கருத்தை பதிவு செய்ய

ப.வேலூர்: ப.வேலூர் தினசரி வாழை மார்க்கெட்டில், சுங்கக் கட்டணம் குறைப்புக்கு, ஏலதாரர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ப.வேலூர் பழைய பஸ் ஸ்டாண்ட் அருகே தினசரி வாழை மார்க்கெட் அமைந்துள்ளது.

நாள்தோறும் ப.வேலூர் அதன் சுற்றுவட்டாரத்தில் இருந்து விவசாயிகள், விற்பனைக்கு கொண்டு வரும் ஒரு வாழைத்தாருக்கு, நான்கு ரூபாய் வீதம் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

சுங்கக் கட்டணம் வசூலிப்பதை ப.வேலூர் டவுன் பஞ்சாயத்து நிர்வாகத்தினர் தனியாருக்கு ஏலம் விடுகின்றனர். நேற்று டவுன் பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில், தினசரி வாழை மார்க்கெட் நுழைவு வாயிலில், வாழைத்தார் ஒன்றுக்கு சுங்கக் கட்டணம், மூன்று ரூபாய் என, அறிவிப்பலகை வைக்கப்பட்டது.

அதனால் மார்க்கெட் வந்த விவசாயிகள், வாழைத்தாருக்கு சுங்க கட்டணமாக, மூன்று ரூபாய் மட்டுமே வழங்க முடியும் என, சுங்கம் வசூலிக்கும் ஏலதாரர்களிடம் தெரிவித்துள்ளனர். அதற்கு ஏலதாரர்கள் மறுப்பு தெரிவித்தனர். எனினும் விவசாயிகள் தங்கள் முடிவில் பின் வாங்காதாதல், நேற்று வாழை மார்க்கெட்டில் சுங்கக் கட்டணம் வசூலிக்காமல் ஏலதாரர்கள் திரும்பினர்.

அதனால், வாழை மார்க்கெட்டில் பரபரப்பு ஏற்பட்டது.

## விவசாயிகள் சங்கஆலோசனை கூட்டம்

பதிவு செய்த நாள் : மே 18,2012,02:40 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட, தமிழ் மாநில விவசாயி தொழிலாளர் சங்க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.

மாவட்டத் தலைவர் பிரதாபன் முன்னிலை வகித்தார். ஒன்றிய செயலாளர் பச்சாகவுண்டர்

கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். ஒன்றிய குழு உறுப்பினர்கள் ராஜகோபால், ராமானுஜம், துளசியான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.
பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் வத்தல்மலை, செம்மாங்குட்டை, மண்ணாங்குழி, பெரியான்குட்டை, நாய்கனூர்குட்டை, பெரியூர், குப்பாங்கரைகுட்டை பகுதியில் ஏரிகளை தூர்வார வேண்டும், தர்மபுரி ஒன்றியத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் வேலைவாய்ப்பு 2011-12ல் வேலை செய்தவர்களுக்கே கிடைக்கவில்லை. கிடைக்காதவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு அட்டை வழங்க வேண்டும், வேலைவாய்ப்பு அட்டை பெறுவதற்கு வங்கி கணக்கு துவங்க வேண்டும் என்பதை எளிமைப்படுத்த வேண்டும், என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றினர்.

## அரசு தோட்டக்கலை பண்ணைகளில்நாற்றுகளை வாங்கி பயன்பெற அழைப்பு

பதிவு செய்த நாள் : மே 18,2012,04:40 IST

கருத்தை பதிவு செய்ய

ஊட்டி:"அரசு தோட்டக்கலை பண்ணைகளில் மலர் செடிகள் உட்பட அனைத்து வகையான நாற்றுக்களை சுற்றுலா பயணிகள் மற்றும் விவசாயிகள் வாங்கி பயன்பெறலாம்,' என அறிவிக்கப்பட்டுள்ளது.
ஊட்டி தோட்டக்கலை இணை இயக்குநர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நீலகிரி மாவட்டத்தில் அரசின் தோட்டக்கலை துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் தரமான செடிகள் இருப்பில் உள்ளன. விவசாயிகள் சம்மந்தப்பட்ட பண்ணை மேலாளரை அணுகி நாற்றுக்களை பெற்றுக கொள்ளலாம்.

கல்லாறு, பர்லியாறு பகுதிகளில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகளில் சில்வர் ஓக், குரோட்டன்ஸ், ஜாதிக்காய், வெல்வெட் ஆப்பிள், மணிபிளான்ட், குருமிளகு, காபி செடிகள், பாக்கு செடி நாற்றுக்கள் விற்பனை செய்யப்படுகிறது. காட்டேரி, நஞ்சநாடு, கோல்கிரைன், தேவாலா, தொட்டபெட்டா பகுதிகளில் உள்ள அரசு தோட்டக்கலைபண்ணைகளில் தேயிலை நாற்றுகள், காபி, சில்வர் ஓக், தேக்கு மரம், பாக்கு மரக்கன்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளன.

ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி ரோஜா பூங்காவில் ரோஜா அலங்கார செடிகள் மற்றும் குன்னூர் சிம்ஸ்பார்க்கில் சப்போட்டா, பிளம்ஸ், பேசன், மாதுளை, லக்கோட் பழக்கன்றுகள்

விற்பனைக்கு தயாராக உள்ளன. இவற்றை விவசாயிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் வாங்கி பயன்பெறலாம். இவ்வாறு, மோகன் கூறியுள்ளார்

## கொய்மலர் நாற்று உற்பத்தியில் புதிய திட்டம்.

பதிவு செய்த நாள் : மே 18,2012,04:40 IST

கருத்தை பதிவு செய்ய
குன்னூர்:அரசு பங்களிப்பில் குன்னூரில், கார்னேஷன் நர்சரி அமைக்கும் திட்டம் அமலுக்கு வரவுள்ளதால், விட்ட தொழிலை தொடர விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

நீலகிரியில், கடந்த 10 ஆண்டுக்கு முன் நலிவடைந்த தேயிலை தொழிலுக்கு மாற்றாக, கடந்த அ.தி.மு.க., ஆட்சியில், கொய்மலர் சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டது. கார்னேஷன், ஜெர்பரா, லில்லியம் உட்பட பசுமைக் குடிலில் வளரும் கொய்மலர் சாகுபடியை மேற்கொள்ள தோட்டக்கலை துறை சார்பில் ஊக்கம், உற்சாகம் வழங்கப்பட்டது.வங்கிகளும் கடன்களை வாரி வழங்கின; விளைவாக, 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் பசுமைக் குடில் அமைத்து கார்னேஷன் மலர் செடிகளை பயிரிட துவங்கினர்.

வாடியது தொழில்:துவக்கத்தில் களை கட்டிய தொழில், நாளடைவில் நலிவடைய துவங்கியது; தொழிலை தொடர்ந்து நடத்த முடியாததால் பல பசுமைக் குடில்கள் பாழடைந்தன; வாங்கிய வங்கி கடனை திருப்பி செலுத்த முடியாமல் விவசாயிகள் தவித்தனர்; வங்கியினரின் தொடர் நெருக்கடியால் திணறிய விவசாயிகள், கடன் நிலுவையை திருப்பி செலுத்த கால அவகாசம் கேட்டனர். மார்க்கெட்டிங் வசதியின்மை, மலருக்கு உரிய விலை கிடைக்காமை, பசுமைக் குடிலை துவம்சம் செய்யும் வன விலங்குகள் உட்பட பல காரணங்களை விவசாயிகள் முன்வைத்தனர்.

நஷ்டமாக்கிய நாற்றுகள் :"தொழிலை தொடர முடியாததற்கு முக்கிய காரணம் தரமற்ற நாற்றுகள் தான்; ஒரு கார்னேஷன் செடியில் இருந்து ஒன்றரை ஆண்டில் மூன்று சாகுபடி டுக்க முடியும்; ஒரு செடியில் 20 மலர்களை பெற முடியும்; ஒரு மலருக்கு 3-4 ரூபாய், சீசன் காலத்தில் 7 ரூபாய் வரை விலை கிடைக்கும் என தோட்டக்கலைத் துறையினர் கூறிய க்கு, துவக்கத்தில் தப்பவில்லை; நல்ல வருமானம் கிடைத்தது. நாளடைவில், ஏஜன்டுகள் மூலம் வினியோகம் செய்யப்பட்ட நாற்றுகளில் தரம் குறைந்தது; ஒரு செடியில் இருந்து 6, 7 மலர்கள் மட்டுமே கிடைத்தன; மூன்று ஆண்டுகள் சாகுபடி அளிக்க வேண்டிய நாற்றுகள், ஓராண்டிலேயே அழுகின' என, விவசாயிகள் குற்றஞ்சாட்டினர்.

தயாரான புதிய திட்டம்:நீலகிரி மாவட்ட சிறு, குறு மலர் சாகுபடியாளர்கள் சங்க தலைவர் விசுவநாதன் தலைமையிலான சங்க நிர்வாகிகள், முன்னாள் விவசாய துறை அமைச்சர் செங்கோட்டையன், இன்னாள் அமைச்சர் தாமோதரனை நேரில் சந்தித்து தங்களின் பிரச்னைகளை விளக்கினர். விளைவாக, தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் இணைந்து விவசாயிகளை பங்குதாரர்களாக கொண்டு, நீலகிரியில் புதிய நாற்று உற்பத்தி செய்யும் நர்சரியை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. 2.50 கோடி ரூபாய் செலவிலான இத்திட்டத்தில், இத்தாலியில் இருந்து 50 ஆயிரம் தாய் செடிகளை வாங்கி, 30 லட்சம் கார்னேஷன் நாற்றுகளை, குன்னூர் காட்டேரி அரசு பழப்பண்ணையில் உற்பத்தி செய்ய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் நம்பிக்கை:திட்டம் விரைவில் அமலுக்கு வரவுள்ள நிலையில், கடந்த ஐந்தாண்டாக தொழிலை தொடர முடியாமல் தவித்த மலர் சாகுபடியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீலகிரி சிறு, குறு மலர் சாகுபடியாளர்கள் சங்க தலைவர் விசுவநாதன் கூறுகையில், ""மலர் சாகுபடிதொழிலை மீண்டும் தொடர வசதியாக விவசாயிகள் பங்களிப்புடன் துவங்கப்படவுள்ள நாற்று நர்சரி திட்டம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சங்கத்தின் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை எடுத்த மாநில அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம். அரசின் இந்நடவடிக்கை மூலம் தொழிலை மீண்டும் வெற்றிகரமாக நடத்தி வங்கி கடன் நிலுவையை செலுத்திவிடும் நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது,'' என்றார்.

### பசுந்தீவன அபிவிருத்தி திட்டம்

பதிவு செய்த நாள் : மே 18,2012,00:21 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல்:கலெக்டர் வெங்கடாசலம் கூறியதாவது:மாவட்டத்தில் 2011-12 ஆண்டில், பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 280 ஏக்கர் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1050 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். இவர்களுக்காக 26.67 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மானாவாரியில் தற்போது 800 ஏக்கரில் தீவன பயிர் சாகுபடி செய்ய 32.40 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், 2800 பயனாளிகளுக்கு 100 சதவீத மானியம் வழங்க, அரசு உத்தரவிட்டுள்ளது. உழவர் பெருவிழாக்களில் மானியத்திற்கான விண்ணப்பங்கள், பெறப்பட்டுள்ளன. விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற, கால்நடை உதவி மருத்துவர்களை அணுக வேண்டும், என்றார்.

தினகரன்

## பாலக்காட்டூரில் உழவர்பெருவிழா

பதிவு செய்த நேரம்:2012-05-18 10:18:02

ஈரோடு: ஈரோடு அருகே பாலக்காட்டூரில் வேளாண்மைத்துறை சார்பில் உழவர் பெருவிழா நிகழ்ச்சி கடந்த மாதம் தொடங்கியது. இதில் வே ளாண்மை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு அரசு வழங்கி வரும் மானியங்கள், திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர். நேற்று நிறைவுநாள் நிகழ்ச்சி நடந்தது. மாநகராட்சி துணை மேயர் பழனிச்சாமி தலைமை தாங்கினார்.
இதையொட்டி நடந்த கால்நடை மருத்துவ முகாமில் 3 ஆயிரம் கால்நடைகளுக்கு மலடு நீக்குதல், குடல்புழு நீக்கம் போன்ற பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. விழாவில் வேளாண்மை இணை இயக்குநர் அக்பர், சித்தோடு பேரூராட்சி தலைவர் வரதராஜன் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ1.20 கோடி மானியம் ஒதுக்கீடு

பதிவு செய்த நேரம்:2012-05-18 10:18:10

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் பசுந்தீவன அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. தமிழகத்தில் ஈரோடு உள்ளிட்ட சில மாவட்டங்களில் பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் பசுந்தீவன அபிவிருத்தி எனும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கறவை மாடு களின் பால் உற்பத்தி செல வில் 70 சதவீதம் தீவனத்திற்கு மட்டுமே செலவிட வேண்டி உள்ளதாலும் கால்நடைகளுக்கு சரிவிகித தீவனம் வழங்க வேண்டி உள்ளதா லும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.
ஈரோடு மாவட்டத்தில் 4 லட்சத்து 49 ஆயிரத்து 500 பசு மற்றும் எருமையிங்கள் உள்ளதாக கால்நடைத்துறையினர் கணக்கிட்டு உள்ளனர். தமி ழக அரசிடமிருந்து இத்திட்டத்திற்காக மானியம் ஒதுக்கப்படுகின்றது. தீவன பயிர் சாகுபடி செய்வது, நீர் சேமிப்பு கருவிகள் வாங்கு வது, புல் வெட்டும் கருவிகள் மற்றும் விவசாய பணிகளுக்கான தளவாட கருவி கள் வாங் குவது உள்ளிட்டவைகளுக்கு இந்த மானியம் செலவிடப் பட்டு வருகின்றது. கடந்த நிதியாண்டில் மாநில அளவில் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ஈரோடு மாவட்டத்திற்கு மட் டும் ரூ.1.99 கோடி

ஒதுக்கீடு பெறப்பட்டது.  மானிய தொகையின் மூலம் 1877 விவசாயிகளுக்கு ரூ.53 லட்சம் செலவில் பசுந்தீவன அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டது. 155 விவசாயிகளுக்கு ரூ.30 லட்சம் செலவில் நீர்சேமிப்பு கருவிகள் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்திற்கு ரூ.1 கோடியே 20 லட்சம் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
மானியத்தை 4 ஆயிரம் விவசாயிகளுக்கு 1000 ஏக்கர் நிலப்பரப்பில் தீவனம் பயிர்செய்ய வழங்கப்படும்.இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் அருகிலுள்ள கால்நடை ஆஸ்பத்திரிகளில் தங்களது பெயர் களை முன்பதிவு செய்து கொள்ளலாம். முன்னுரிமை பதிவேட்டின் படி பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் தடுப்பூசி பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-05-17 11:42:36

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 24ம் தேதி காலை 9 மணிக்கு கறவை மாடுகளில் சினைக்கால பராமரிப்பு மற்றும் தடுப்பூசி முறைகள் என்ற தலைப்பில் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில், கறவை மாடு இனங்கள், இன விருத்தி முறைகள், தீவன முறைகள்,  சினைக்காலத்தில் கறவை மாடுகளை பராமரிக்கும் முறைகள், நோய் தடுப்பு குறி த்து பயிற்சி அளிக்கப்படுகிறது.
பயிற்சியில் சேர விருப் பம் உள்ளவர்கள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு வரும் 23ம் தேதிக்குள் நேரில் வந்து பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

## செந்துறை வேளாண் அலுவலகத்தில் 50 சதவீத மானிய விலையில் சான்று பெற்ற நெல் விதைகள் விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நேரம்:2012-05-17 11:47:04

செந்துறை: செந்துறை வேளாண் அலுவலகத்தில் 50 சதவீத மானிய விலையில் சான்று பெற்ற நெல் விதைகள் இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
செந்துறை வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: செந்துறை வட்டாரத்தில் உள்ள செந்துறை, நமங்குணம், அசாவீரன்குடிக்காடு, பெரியாக்குறிச்சி, மணக்குடையான், சன்னாசிநல்லூர், வஞ்சினாபுரம் ஆகிய கிராமங்களில் குறுவை நெல்

சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு விதை கிராம திட்டத்தின்கீழ் ஆடுதுறை 36 ரக சான்று பெற்ற விதைகள் செந்துறை வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சான்று பெற்ற நெல் விதைகள் 50 சதவீத மானிய விலையில் ஒரு கிலோ நெல் விதை ரூ.11.25 பைசா விலையில் வழங்கப்படும். எனவே குறுவை நெல் சாகுபடியில் ஈடுபட்டு வரும் விவசாயிகள், செந்துறை வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் சான்று பெற்ற நெல் விதையை வாங்கி அதிக மகசூல் பெற்று பயன்பெறலாம்.

விதை கிராம திட்டத்தின்கீழ் செந்துறை வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உளுந்து விதை செந்துறை வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. வம்பன்3 ரக சான்று பெற்ற உளுந்து விதை 50 சதவீத மானியமான ஒரு கிலோ உளுந்து விதை ரூ.30 விலையில் விற்பனை செய்யப்படுகிறது. எனவே விவசாயிகள் அனைவரும் சான்று பெற்ற நெல் மற்றும் உளுந்து விதைகளை வாங்கி பயனடையலாம்.